தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

**TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY**

**(With UGC 2(f)&12(B) status and NAAC Accrediated with 'A' Grade in 1st Cycle)**

**(Established under Tamil Nadu Act 33 of 2008)**

Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.

Website: www.tnteu.in

**No.TNTEU/R/TP/2026/** 651 **Date: 19.09.2026**

# சுற்றறிக்கை

**பொருள் :** TNTEU – இணைவு பெற்ற கல்வியியல் கல்லூரிகள்– பி.எட் இரண்டாம் ஆண்டு –மூன்றாம் பருவம் – கற்றல் கற்பித்தல் பயிற்சிக்கு பள்ளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது –பள்ளிக்கு செல்லக்கூடிய மாணவர்கள் விவரங்களை கல்லூரி புகுபதிகையில் (Login–இல்) பதிவேற்றம் செய்தல் மற்றும் அதன் நகலை PDF வடிவ ஆவணமாக மாற்றி மின்னஞ்சலில் அனுப்புதல் – தகவல் தெரிவித்தல் – சார்பு.

*****

மேற்காண் பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ள கல்வியியல் கல்லூரிகளில் பி.எட் இரண்டாம் ஆண்டு மூன்றாம் பருவத்தில் பயிலும் மாணாக்கர்களுக்கு, கற்றல் கற்பித்தல் பயிற்சிக்கு பள்ளிக்கல்வி துறையின் வாயிலாக பள்ளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட கல்லூரிக்கு பல்கலைக்கழகம் கல்லூரி புகுபதிகையில் (Login–இல்) வழியாகவும், இணைவு மின்னஞ்சல் வழியாகவும் தகவல் தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பள்ளிகளுக்கு, கற்றல் கற்பித்தல் பயிற்சிக்கு செல்லக்கூடிய மாணாக்கர்கள் விவரங்களை கல்லூரி புகுபதிகையில் (Login–இல்) பதிவேற்றம் செய்வதற்கு கடைசி நாள் 23/09/2026 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே கல்லூரி முதல்வர்கள் கற்றல் கற்பித்தல் பயிற்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மாணாக்கர்கள் விவரங்களை கல்லூரி புகுபதிகையில் (Login–இல்) பதிவேற்றம் செய்து அதனை PDF வடிவ ஆவணமாக மாற்றி tnteuteachingpractice2026@gmail.com என்ற மின்னஞ்சலில் அனுப்பிட வேண்டுகிறோம். மேலும் வருகின்ற 23/09/2026 க்குள் விவரங்களை சமர்ப்பிக்காத மாணாக்கர்களின் விவரங்கள் பல்கலைக்கழக தேர்விற்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாது என்பதை கண்டிப்பாக தெரிவிக்கலாகிறது.

இதனை அவசரமானதாகக் கருதலாம்.

19/9/26

**பதிவாளர் (பொ)**

பெறுநர்:

முதல்வர்கள்,
பல்கலைக்கழக இணைவு பெற்ற அனைத்துக் கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.